Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk


தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 24, 2024

புதன்கிழமை ஜூலை 24, 2024 | ஒளி: 10 கதிர் 2301 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

# O/L பெறுபேறு வருகிறது



நடைபெற்ற 2023/2024 கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை பெறுபேறுகளை செப்டெம்பர் மாதம் வழங்கப் பரீட்சை திணைக்களம் தயாராக இருப்பதாகக் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த ஹோமாகமவில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

# "ஜனாஸாக்களை எரித்தமைக்கு மன்னிக்கவும்"

கொவிட்-19, தொற்றுநோய்களின் போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டாய தகனம் கொள்கை தொடர்பாக மன்னிப்பு கோருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், செவ்வாய்க்கிழமை (23) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், நீதித்துறை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர். ஆகியோரால் முன்மொழியப்பட்ட கூட்டுப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொவிட்-19 இன் மருத்துவ மேலாண்மை குறித்து சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி, வைரஸால் இறந்தவர்களின் உடல்களை அப்புறப்படுத்தும் முறையாகத் தகனம் செய்யப் பரிந்துரைக்கப்பட்டது.

அதன்படி, கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்ட 276 முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்பட்டன, பின்னர் பெப்ரவரி 2021 இல், கடுமையான கட்டுப்பாடுகளுடன் அத்தகைய நபர்களுக்கு அடக்கம் செய்யப்பட்டது.

ஜூலை 2021 இல், ஸ்ரீ ஜெயரவதனாபுர பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன், அப்போதைய நீர் வழங்கல் அமைச்சகம், கொழும்பு, கண்டி ஆகிய நீர் வாழ் சூழல்களில் SARS-CoV-2 வைரஸைக் கண்டறியும் ஆய்வைத் தொடங்கியது, ஆற்று நீர், மருத்துவமனைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர், தனிமைப்படுத்தப்பட்ட மையங்கள் மற்றும் பிற சாத்தியமான பகுதிகள்.

மேற்பரப்பான நீரில் வைரஸ் இல்லை என ஆய்வில் தெரியவந்துள்ளது.

மார்ச் 2024 இல், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நீர் தொழில்நுட்பத்திற்கான சீனா-இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தினால் இரண்டாவது ஆய்வு நிறைவு செய்யப்பட்டது, இது SARS-CoV-2 வைரஸ் பரவுவதற்கான முதன்மை ஆதாரங்களை அடையாளம் கண்டுள்ளது. நிலத்தடி நீர் உள்ளிட்ட நீர் ஆதாரங்கள் மலம் மற்றும் சிறுநீர் தான், பாதுகாப்பான புதைகுழிகள் அல்ல.

தொடர்ச்சி P2



கறுப்பு ஜூலை தினத்தில்

# யாழில் கதறிய உறவுகள்




நிதி வேண்டாம் நீதியை வழங்கு என கோரினர்

■ எஸ்.நிதர்ஷன்

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கறுப்பு ஜூலை தினத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை யாழில் முன்னெடுத்தனர்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் யாழ். மாவட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். பிரதான வீதியிலுள்ள கலைத்தூது மண்டபத்திற்கு முன்பாக, செவ்வாய்க்கிழமை (23) மதியம் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டு தரக் கோரி வடக்கு கிழக்கிலுள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் மேற்படி சங்கத்தினர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைய யாழ்ப்பாணத்தில் இப் போராட்டம் செவ்வாய்க்கிழமை (23) முன்னெடுக்கப்பட்டது.

"உறவுகள் எங்கே", "நீதி வேண்டும்", "சர்வதேசமே கண்ணைத் திறந்து பார்", "உறவுகள் நீதி கோருகிற போது அரசாங்கமே நிதியை வழங்கி ஏமாற்றாதே", "எங்கள் உறவுகளுக்குப் பதில் கூறு" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர்.

மேலும், கறுப்பு ஜூலை தினமான, ஜூலை 23ஆம் திகதியன்று கறுப்பு ஜூலைக் கலவரத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் நீதி வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் யாழ்.மாவட்ட சங்கத்திற்கான புதிய நிர்வாக தெரிவும் இடம்பெற்றிருந்தது. முன்னர் இருந்த சங்கத் தலைவி பூங்கோதை தலைமையிலான நிர்வாகமே மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கறுப்பு ஜூலைக்கு 41 வருடங்கள் நிறைவு

# சபையில் நினைவு கூர்ந்தார் எம்.பி.



இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கறுப்பு ஜூலைக் கலவரத்தின் 41ஆவது ஆண்டு நிறைவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் நினைவு கூர்ந்தார் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற குடியியல்

தொடர்ச்சி P2

# ஜனாதிபதித் தேர்தலில் 'Tactile Ballot Paper'



ஜனாதிபதி தேர்தலில் முதன்முறையாக விழிப்புலனற்ற சமூகத்தினருக்காக விசேட தொட்டுணரக்கூடிய வாக்குச் சீட்டு (Tactile Ballot Paper) அறிமுகப் படுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்தார்.

வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர்

தொடர்ச்சி P2

# "சிறைக்குச் செல்ல நான் தயார்"




வி.எப்.எஸ்.விசா விவகாரம் தொடர்பில் நான் சமர்ப்பித்த அறிக்கை உண்மையானது. மக்களுக்காக சிறை செல்ல நான் தயார் என அரச நிதி தொடர்பான குழுவின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யுமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) து விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த அவர்

தொடர்ச்சி P2

# அடகு நகைக்கு 10% வட்டி மானியம்



வங்கிகளில் தங்க நகைகளை அடகு வைத்துள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டில் சமீபகாலமாக நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடியானது பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்துள்ளதுடன், இதன் விளைவாகத் தங்கப் பொருட்களை அடமானம் வைப்பது வேகமாக அதிகரித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# "பாடங்களை நீக்குவது முட்டாள்தனம்"

**சாதாரண தரப் பரீட்சைக்கு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடம் உள்ளடக்கப்பட வேண்டும்**



முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தின்படி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், அழகியல் பாடங்களை நீக்குவது முட்டாள்தனமான செயல் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு

தொடர்ச்சி P2

# "படுகொலை செய்ய சதி"



என்னைப் படுகொலை செய்வதற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் சதி செய்வதாக இணையத்தள செய்தித் சேவை ஒன்றில் வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டுள்ள செய்தி தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கைத்தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா.சாணக்கியன் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# மொட்டுத் தலைவர்கள் 12 பேர் இரகசிய பேச்சு

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைத் தவிர வேறு வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டால் அதனை எதிர்த்து ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 12 மாவட்ட தலைவர்கள் தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் கொழும்பு மலலசேகர மாவத்தையில் உள்ள இராஜாங்க அமைச்சர் ஒருவரின்

தொடர்ச்சி P2

# ஜீவனுக்காக பணிப்புறக்கணிப்பு



■ ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் இயங்கும் களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்துக்குச் சொந்தமான அனைத்து பெருந்தோட்டங்களிலும் தொழிலாளர்கள் தமது வழமையான தேயிலை தொழிலை ஸ்தம்பித்தப்படுத்தி பணிபுறக்கணிப்பில் செவ்வாய்க்கிழமை

தொடர்ச்சி P2

# "ஜே.வி.பி, தூண்டி விட்டு வீதிக்கு இறக்குகின்றது"



தொழிற்சங்கத்தினரை ஜே.வி. பியினர் தூண்டி வீதிக்கிறக்குகின்றனர் அதனால் தொழிலுக்கு ஆபத்து ஏற்படும் ஊழியர்களிடமிருந்து ஜே .வி. பி.சட்டத்தரணிகள் பணம் உழைக்கின்றனர் என மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான

தொடர்ச்சி P2

# "பங்களாதேஷில் பத்திரமாய் உள்ளனர்"



பங்களாதேஷில் நிலவும் நெருக்கடி நிலை காரணமாக அங்குள்ள இலங்கையர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. பாதிப்புகள் ஏற்படும் நிலை காணப்பட்டால் அவர்களை உடனடியாக நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் அரச தரப்பு எம்.பியான ராஜிகா விக்ரமசிங்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “ஜனாஸாக்களை எரித்தமைக்கு மன்னிக்கவும்”

அதன்படி, கொவிட்-19 தொற்றுநோய்களின் போது இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட கட்டாய தகனம் கொள்கையால் பாதிக்கப்பட்ட சமூகப் பிரிவினரிடம் மன்னிப்பு கேட்கவே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏதேனுமொரு ஆளுக்கு அல்லது உறவினருக்கு தமது சுயவிருப்பின் பிரகாரம் உயிரிழந்தவர்களின் உடலை நல்லடக்கம் செய்வதற்கோ அல்லது தகனஞ் செய்வதற்கான தெரிவுக்கு இடமளிக்கும் வகையில் சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## “பங்களாதேஷில்...

இவ்வாறு தெரிவித்தார் பங்களாதேஷில் 2,835 இலங்கையர்கள் தொழில் மற்றும் தொழிற் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அங்குக் கல்வி நடவடிக்கைகளுக்காகச் சென்றுள்ள இலங்கை மாணவர்களின் சரியான எண்ணிக்கையை உடனடியாக தெரிவிக்க முடியாதுள்ளது.

எவ்வாறெனினும் அந்த நாட்டிலுள்ள இலங்கை தூதுவருடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம். அவர் வழங்கிய தகவல்களின்படி இலங்கையர்கள் எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றார்

## மொட்டுத் தலைவர்கள்...

இல்லத்தில் திங்கட்கிழமை (22) இரவு இடம்பெற்றதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சி வேறு வேட்பாளரை நியமித்தால், பெரும்பான்மைக் கருத்துக்கு எதிராகச் சென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவைத் தெரிவிக்க அவர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அமைப்பு ரீதியான செயற்பாடுகளை மாவட்ட மட்டத்தில் அந்த சபை உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## “சிறைக்குச் செல்ல...

மேலும் பேசுகையில், வி.எப்.எஸ்.விசா விவகாரம் தொடர்பில் நான் பொய்யான அறிக்கையைச் சபைக்குச் சமர்ப்பித்து சிறை செல்லும் குற்றத்தைப் புரிந்துள்ளதாகக் குற்றம்சாட்டப்படுகின்றது .முன்வைக்கப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுக்களையும், தனித்தனியாகவும், முழுமையாகவும் நிராகரிக்கிறேன். அரச நிதிக் குழுவிலிருந்து என்னை நீக்குவது ஒன்றும் புதிதல்ல, நிலக்கரி விவகாரத்திலும் இவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தலைவர் பதவியிலிருந்து என்னை நீக்கினார்கள்.

எதிரணியில் இருந்து கொண்டு கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் இவ்விடயத்தை ஆராய்ந்துள்ளேன். இதனை நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நன்கு அறிவார். அறிக்கை சமர்ப்பித்த பின்னர் அரசியல் நோக்கத்துக்காக என்னைச் சிறைக்கு அனுப்ப முயல்வது நியாயமற்றது. நான் இரகசியமாக எதனையும் செய்யவில்லை. மூன்று வாரங்கள் குழுவில் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டது.

புதிய விசா விநியோக முறைமையினால் சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குழுவின் தலைவராக என்னால் முடிந்ததைச் செய்துள்ளேன். எதனையும் நான் தனியாகச் செய்யவில்லை. சிறை செல்லும் குற்றத்தைச் செய்ததாகக் குறிப்பிடுகிறார்கள். மக்களுக்காக உண்மையை வெளிக் கொண்டு வந்தேன். ஆகவே நான் மக்களுக்காக சிறைக்குச் செல்ல தயார். தேவையானால் நான் அறிக்கையை மீண்டும் முழுமையாக ஆராய்ந்து பதிலளிக்கிறேன். அதுவரை அரச நிதிக் குழுவின் தலைவர் பதவியை யாராவது பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்.

இதன்போது எழுந்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, அரச நிதிக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஹர்ஷ டி சில்வாவை நீக்கும் தேவை எமக்கு கிடையாது எதிர்க் கட்சிக்கே அந்த தேவை உள்ளது. குழுவின் செயற்பாடுகளை நடுநிலையாக முன்னெடுங்கள் என்றே வலியுறுத்துகிறோம். இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து சிறைக்கு அனுப்புவதாகக் குறிப்பிட்டு சேறு பூச வேண்டாம். இதன்போது எழுந்த ரவூப் ஹக்கீம், வி. எப்.எஸ். விசா குளறுபடியால் சுற்றுலாப் பயணிகளின் வருகை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது என்பதைத் தரவு ரீதியாகக் குழுவில் முன்வைத்தேன். சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஏற்றுக் கொண்டார். புதிய விசா முறைமை அமுலுக்கு பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளதை சுற்றுலாத்துறை அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் குழுவில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நிலையில் குழு பொய்யான அறிக்கையை முன்வைத்துள்ளதாகக் கூறுவது நியாயமற்றது. முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பிரித்தானியப் பிரஜையல்ல என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தற்போதைய கட்டுப்பாட்டாளர் உயர் நீதிமன்றத்துக்குச் சத்தியக் கடதாசி ஊடாக பொய்யுரைத்தார். ஆகவே அவரிடம் கவனமாக இருங்கள் என்றார்.

## ஜனாதிபதித் தேர்தலில் ‘Tactile Ballot Paper’

ஜகத்குமார சுமத்திராரச்சி தலைமையில் கூடியபோதோ அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல்களின் போது அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதைக் குறிக்கும் வகையில் விரல்களில் வர்ணம் பூசுவது அநாவசியமானது என்ற குழுவின் முன்னைய அறிவுறுத்தல் குறித்தும் இக்குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கு அமைய விரல்களில் பூசப்படும் வர்ணங்களை இறக்குமதி செய்வதை இரத்துச் செய்வது குறித்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், இதனை இந்தச் சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்தாதிருக்க அமைச்சரவை தீர்மானித்திருப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்தார்.

கைவிரல்களில் வர்ணம் பூசும் செயற்பாட்டை நீக்கினால் அதிகப் பணம், நேரம் மற்றும் உழைப்பு மீதப்படுத்தப்படும் என்பது இங்குக் கலந்துரையாடப்பட்டது. இதன்படி, தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான அனைத்து முன்மொழிவுகளையும் குழுவில் சமர்ப்பிக்குமாறு குழுவின் தலைவர் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

மேலும், எதிர்வரும் தேர்தலில் இயலாமையுடைய நபர்களுக்காக மேலும் பல சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இம்முறை ஜனாதிபதி தேர்தலில் முதன்முறையாக விழிப்புலனற்ற சமூகத்தினருக்காக விசேட தொட்டுணரக்கூடிய வாக்குச் சீட்டு (Tactile Ballot Paper) அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினருக்காகத் தேர்தல் தொடர்பான 320 சொற்களைக் கொண்ட புதிய சைகை மொழி சொற்களஞ்சியம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவு ம், இயலாமையுடைய சமூகத்தின் செயல்பாடுகளுக்கு அணுகல் வசதிகள் உள்ளிட்ட அதிகபட்ச வசதிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## “பாடங்களை நீக்குவது முட்டாள்தனம்”

தெரிவித்த அவர் மேலும் பேசுகையில், 2006 ஆம் ஆண்டில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடம், முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தில் பரீட்சை திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட 7 முக்கிய பாடங்களுக்குள் உள்ளடக்கப்படவில்லை. இலங்கையை டிஜிட்டல் இலங்கையாக உருவாக்கும் நோக்கில் செயற்படும் இவ்வேளையில், இவ்வாறான முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கக் கூடாது.

முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தின்படி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடத்தைக் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகளுக்கான பாடங்களில் ஒன்றாக அதனை உள்ளடக்குவதில்லை என தீர்மானித்துள்ளனர்.

மாறிவரும் தொழில்நுட்ப யுகம் உருவாகியுள்ள இவ்வேளையில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடம் உள்ளடக்கப்பட வேண்டும்.

அவ்வாறே அழகியல் பாடத்தையும் நீக்கியுள்ளனர். எனவே, இந்தப் பாடங்களை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானம் முட்டாள்தனமான செயல்.

இது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

## “ஜே.வி.பி, தூண்டி விட்டு வீதிக்கு இறக்குகின்றது”

வினா நேரத்தின் போது பிரேம்நாத் சி.தொலவத்தே எம்.பி. எழுப்பிய முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

புதிய மின்சார சபை சட்டத்தை நிறைவேற்றினால் மின்கட்டமைப்பு துறையின் சகல கட்டமைப்புக்களும் தனியார் மயப்படுத்தப்படும் என்று கூறிக் கொண்டு கடந்த ஜனவரி மாதம் அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி மின்சார சபை தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களிலும், தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் இறங்கினார்கள்.

மின்சார சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மின் விநியோகம் மற்றும் பொதுச் சேவைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுங்கள் என்று அறிவுறுத்தினோம் என்றார்

தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்காக இலவசமாக நீதிமன்றில் ஆஜராகுவதாக வாக்குறுதி வழங்கிய ஜே .வி.பி. யின் சட்டத்தரணி சுனில் வடகல, தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டதனால் பணி இடைநிறுத்தப்பட்டுள்ள மின்சார சபையின் 62 ஊழியர்களிடமிருந்து வழக்கு கட்டணமாக 55 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளார் என்றார்.

## சபையில் நினைவு கூர்ந்தார் எம்.பி.

நடவடிக்கை முறை சட்டக்கோவை திருத்த சட்டமூல விவாதத்தில் உரையாற்றும்போதே கறுப்பு ஜூலைக் கலவரத்தை நினைவு கூர்ந்த அவர் மேலும் பேசுகையில்,

இன்று (23) ஜூலைக் கலவரத்தின் 41 ஆவது ஆண்டு தினம் .1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி இலங்கையின் சகல பகுதிகளிலும் தமிழர்கள் மீது தொடர்ந்து 3 தினங்கள் காட்டேறித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டன . அவ்வாறு தாக்குதல்கள் நடத்தப்பட்டு இன்றுடன் 41 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்னும் தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

தற்போது தமிழர்களுக்கு இருந்த நிலங்களும், கலாசார அடையாளங்களும் பறிபோய்க் கொண்டிருக்கின்றன என்பதனை இந்த சபையில் கவலையுடன் பதிவு செய்கின்றேன் என்றார்.

## ஜீவனுக்காக பணிப்புறக்கணிப்பு

(23) காலை ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு முக்கிய காரணங்களை முன் வைத்து இந்த பணிப்புறக்கணிப்பில் செவ்வாய்க்கிழமை(23) தொழிலாளர்கள் இறங்கியுள்ளனர்.

1,700 ரூபாய் சம்பளத்தைத் தர மறுக்கும் களனிவெளி கம்பனி தொழிலாளர்கள் அடி வயிற்றில் அடித்து அடாவடி போக்கைக் கடைப்பிடிப்பதாகவும்,

இத்தகைய அடாவடியைக் கண்டித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுத்து அவரை கைது செய்ய இந்த கம்பனி நடவடிக்கை எடுத்ததைக் கண்டித்தும் இந்த பணிபுறக்கணிப்பு செய்யப்படுவதாகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அந்த வகையில் களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் இயங்கும் நுவரெலியா பீட்று தோட்டத்திற்குக் கீழ் இயங்கும் பீட்று, லவர்சிலீப், நேஸ்பி,

மூன்பிளேன், மாகாஸ்தோட்ட, ஸ்கிராப் ஆகிய தோட்டங்களுடன் ஒலிபண்ட் மற்றும் நுவரெலியா டிவிஷன் ஆகிய தோட்டங்களிலும் தொழிலாளர்கள் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதேபோல நானுஓயா பிரதேசத்தில் களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிர்வாகத்தின் கீழ் இயங்கும் எடின்புரோ, கிளாசோ, ஆடிவன், மற்றும் கிளாஸோ மேல் பிரிவு கீழ் பிரிவு ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் மற்றும்

உடரதல்ல மேல் மற்றும் கீழ் பிரிவு தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதேநேரத்தில் களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் இயங்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஹேலீஸ் பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ரதல்ல மேல் பிரிவு தொழிலாளர்களும், வங்கி ஓயா கீழ் பிரிவு தொழிலாளர்களும் பணிபுறக்கனிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## “படுகொலை செய்ய சதி”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்திய இரா..சாணக்கியன் மேலும் பேசுகையில்,

என்னைப் படுகொலை செய்வதற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் சதி செய்வதை வெளிநாட்டு புலனாய்வுப்பிரிவொன்று கண்டுபிடித்துள்ளதாக இணையத்தள செய்தி சேவை கடந்த 20 ஆம் திகதி செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த செய்தியின் உண்மைத் தன்மைபற்றி எனக்குத்தெரியாது. ஆனால் இந்த விடயம் தொடர்பில் நான் சபாநாயகருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்.

இதில் என்னைப் படுகொலை செய்வதற்குச் சதி செய்வதாகக் கூறப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் ஏற்கெனவே எம்.பி. படுகொலை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பு பட்டவர் எனக்குற்றம் சாட்டப்பட்டவர். எனவே இந்த செய்தி தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சபாநாயகரிடம் வலியுறுத்துகின்றேன் என்றார்.

## “தடுத்து நிறுத்த யாராலும் முடியாது”

ஜனாதிபதித் தேர்தலை தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் நடக்கும் என்ற உறுதிமொழியை வழங்குகின்றேன். ஜனாதிபதி தேர்தலுக்கான பணமும் அரசினால் வழங்கப்பட்டுவிட்டதென பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) சுயாதீன எதிரணி எம்.பியான அத்துரலியே ரத்தன தேரர். ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தை ஜனாதிபதி கையில் எடுத்துள்ளதாலேயே இந்த சந்தேகம் எழுந்துள்ளது. அதேபோன்று ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்ற கேள்வியை எழுப்பினார். இந்தக் கேள்விக்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எந்தவகையிலும் தடைகளை ஏற்படுத்தப்போவதில்லை. ஜனாதிபதி தேர்தலை நிச்சயமாக நடத்துவோம். இந்த மாதம் 17ஆம் திகதியுடன் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அது தொடர்பான அதிகாரம் கிடைத்துள்ளது.. அதனை நிறுத்த யாருக்கும் முடியாது. அரசாங்கம் என்றவகையில், தேர்தலுக்குத் தேவையான பணத்தையும் வழங்கியுள்ளோம் அதனால் இந்த வாரத்துக்குள் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறக்கூடிய

திகதியைத் தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

எனவே ஜனாதிபதி தேர்தல் மிகவும் அண்மையில் இருக்கும் ஒரு திகதியில் இடம்பெறும் என்ற உறுதியை வழங்குகிறேன். அத்துடன் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு தற்போதைக்கு அவசியம் இல்லை.

2025ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம்

20ஆம் திகதிவரை பாராளுமன்றத்துக்கான காலம் இருக்கிறது. என்றாலும் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிக்குப் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் இருக்கிறது. அதனால் தற்போதைக்கு பாராளுமன்றத்தைக் கலைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்றார்.

## அடகு நகைக்கு 10% வட்டி மானியம்

2019ஆம் ஆண்டில் சுமார் 210 பில்லியன் ரூபாவாக இருந்த அடமான முன்பணங்களின் நிலுவைத் தொகை, மார்ச் 2024க்குள் 172% அதிகரித்து 571 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது என்றும் அரசாங்கம் கூறுகிறது.

அந்த நிலையைக் கருத்தில் கொண்டு, உரிமம் பெற்ற வங்கிகளில் அடமான முன்பணம் பெற்ற குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அவசியம் கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி, 2024ஜூன் 30, அன்று அல்லது அதற்கு முன் உரிமம் பெற்ற வங்கிகளில் இருந்து தனிநபர் அடிப்படையில் வாடிக்கையாளர்கள் ரூ.100,000க்கு மிகாமல் அடமான முன்பணங்களுக்கு ஆண்டுக்கு அதிகபட்சமாக 10%க்கு உட்பட்டு, கருவூலம் பொருத்தமான ஒன்றைச் செயல்படுத்த வட்டி மானியத்தை வழங்கும். பண திட்டம், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.















# கறுப்பு ஜூலை நினைவேந்தல்

யது பாஸ்கரன், நிதர்ஷன் வினோத்



கறுப்பு ஜூலைப் படுகொலையின் 41ஆவது ஆண்டு நினைவேந்தல், இலங்கைத் தமிழரசுக் கட்சி கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், கட்சியின் மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் ஸ்ரீதரன், வடக்கு மாகாணசபையின் மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, எழுத்தாளரும் ஆசிரியருமான தீபச்செல்வன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றியிருந்தனர்.

கட்சியின் செயல்நிலை உறுப்பினர்கள் பலரது பங்கேற்புடன் நடைபெற்ற இந்நினைவேந்தலின் போது, அண்மையில் மறைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனுக்கும், தமிழீழ இராணுவ இயக்கத்தின் தலைவரும், ஈழப் போராட்டத்தின் முன்னோடிகளுள் ஒருவருமான தம்பாப்பிள்ளை மகேஸ்வரனுக்கும் (பனாகொட மகேஸ்வரன்) அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





தேர்தல்கள் கூட்டணி

# ஓகஸ்ட் 8 கைச்சாத்து

அடுத்த தேர்தல்களை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய ஐக்கிய மக்கள் கூட்டணி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி கைச்சாத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை(23) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனை குறிப்பிட்டார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர் என சகல சமூகங்களையும் சேர்ந்த தரப்பினரை இணைத்துக் கொண்டு இக்கூட்டணியை அமைப்போம். இக்கூட்டணியில் சிங்கள, தமிழ்,முஸ்லிம் பர்கர் என்ற சகோதர சமூகங்களின் கட்சிகளும் எம்மோடு கைகோர்க்கவுள்ளனர். அவ்வாறு 30க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய தினம் எம்மோடு கைகோர்க்கவுள்ளனர்.

இந்நாட்டிலுள்ள சகல இனத்தவர்களையும் சகல மதத்தவர்களையும் இணைத்துக் கொண்டே டி.எஸ்.சேனாநாயக்க 1946 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியை ஸ்தாபித்தார். இன்று சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக இந்நாட்டிலுள்ள சகல இனத்தவர்களையும் சகல தரப்பினரையும் இணைத்துக் கொண்டு இந்த கூட்டணியை ஸ்தாபிப்பார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடுவோம். நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார பிரச்சினை, சட்டத்தின் ஆட்சியிலுள்ள வீழ்ச்சி, விழுமியம் என்பவற்றுக்கு பதிலளிக்கும் விதமாக எமது கொள்கை வகுப்பாக்கதை மேற்கொள்வோம். ஊழல் இல்லாத நாடு குறித்து சிந்திக்கும் பல தலைவர்கள் இக்கூட்டணியில் இணைந்து கொள்ளவுள்ளனர் என்றார்.



## சாய்ந்தமருது கொலை; ஐவருக்கு விளக்கமறியல்

தனது மாமனாரை தாக்கி கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேகநபரான மருமகன் உட்பட ஐவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.




அம்பாறை, சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிவேரியன் கிராமம் பிரிவு-09 பகுதியிலுள்ள வீடு ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) அதிகாலை ஏற்பட்ட குடும்ப மோதலில் திருமணமான தனது மகளை விவாகரத்து செய்யத் தயாரான மருமகனுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக 62 வயதுடைய மீராசாயிப் சின்னராசா என்பவர் மரணமடைந்திருந்தார்.

இது தொடர்பிலான வழக்கு திங்கட்கிழமை(22) அன்று கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேக நபர் உட்பட ஐவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வோர்ட் பிளேஸில் ஓட்டோவுக்குள் சடலம்

கொழும்பு- வோர்ட் பிளேஸில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டிக்குள் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட 33 வயது மதிக்கத்தக்க நபரின் சடலம் செவ்வாய்க்கிழமை (23) அதிகாலை 1 மணியளவில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.



கறுவாத்தோட்டம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், தேசிய பல் வைத்தியசாலைக்கு அருகில் இருந்து குறித்த முச்சக்கரவண்டி மீட்கப்பட்டது. விசாரணையில் அது மித்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருடையது என தெரியவந்துள்ளது.

குறித்த நபரிடம் வினவியபோது, முச்சக்கரவண்டியை 33 வயதுடைய தனது மைத்துனருக்கு வாடகைக்குச் செலுத்த வழங்கியதாக அவர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கறுவாத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 10 வயது மகளை வன்புணர்ந்த தந்தை

பசறை-வெல்கொல்ல பிரதேசத்தில் 10 வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் அவரது தந்தை திங்கட்கிழமை (22) இரவு கைது செய்யப்பட்டதாக பசறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பதுளை பிரதேசத்தில் உள்ள நிறுவனமொன்றில் அலுவலக உதவியாளராக கடமையாற்றும் 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு மூன்று நாட்களாக, பாதிக்கப்பட்ட சிறுமியின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானித்த அவரது தாயார் சிறுமியிடம் விசாரித்த போது, வெள்ளிக்கிழமை(19) அன்று தாய் வயல் வேலைக்குச் சென்றிருந்த போது தந்தையால் தனக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றிக் கூறியுள்ளார்.

இது தொடர்பில், தாய் பசறை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபரான தந்தையைக் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமி பசறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும், சந்தேக நபரை பசறை நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மாகாணசபை தேர்தல் தீர்ப்பு வருகிறது

மாகாணசபை தேர்தல் தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பு மிக விரைவில் கிடைக்கும் . நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் செயற்பட நாங்கள் தயாராக இருக்கிறோம் என பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) அத்துரலியே ரத்தன தேரர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறுத்தெரிவித்தார்.

மாகாணசபை தேர்தல் தொடர்பில் நான்கு வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன. சுமந்திரன் எம்.பி.சபையில் முன்வைத்துள்ள பிரேரணைக்கு அமைய விகிதாசார (பழைய) முறையில் தேர்தலை நடத்த நாங்களும் ஆதரவளிப்போம். எனினும் மாகாணசபை தேர்தல் தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பு மிக விரைவில் கிடைக்கும் . நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் செயற்பட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.

## போதை பொருளுடன் 16 பேர் கைது

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு-காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொலிஸார் நடாத்திய ‘யுக்திய’ போதை ஒழிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 16 பேர் கைது செய்யப்பட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எஸ். ரமேஷ் தெரிவித்தார்.



இச் சுற்றிவளைப்பின் போது, செவ்வாய்க்கிழமை (23) காலை பெண் ஒருவருடன் எட்டு பேர் காத்தான்குடி பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், நாவற்குடா, நொச்சிமுனை, கல்லடி பிரதேசங்களிலிருந்து சுமார் 40 லீற்றர் கசிப்புடன் எட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களுடன் மற்றும் மீட்கப்பட்ட போதைப் பொருள்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## “தேர்தல் திகதியை உடனடியாக அறிவிக்கவும்”



ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்ற தினத்தையும் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற திகதியையும் உடனடியாக அறிவிக்குமாறு சட்டத்தரணி சுனில் வட்டகல கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில், செவ்வாய்க்கிழமை(23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்நேரமும் ஐயப்பாட்டுடன் வாழ்கின்ற ரணில் விக்ரமசிங்க அதனை சமூகமயப்படுத்த முயற்சி செய்துகொண்டிருக்கிறார். ஐந்து வருடங்களா ஆறு வருடங்களா என்கின்ற உரையாடல் முதன்முதலில் 19ஆவது திருத்தம் உயர்நீதிமன்றத்திற்கு வந்தவேளையிலேயே முடிவுக்கு கொண்டுவரப்பட்டது என்றார்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் நீதியமைச்சர் தனிக் கடதாசியில் வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டார். அவரே, “இதனை நாங்கள் ஜனாதிபதி தேர்தலுக்குள் கொண்டுவர மாட்டோம், அதனை முன்னெடுத்துச் செல்லவேண்டாம்” என அவருடைய செயலாளருக்கு அறிவித்ததாகக் கூறினார்.

அவ்வாறு கூறியிருக்கையில், ரணில் விக்ரமசிங்கவின் செயலாளர் தனிக் கடதாசியில் வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டார்.

மக்கள் தீர்ப்பிற்குச் செல்வதா, அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தடையேதும் ஏற்படுமா? என்ற விடயத்தின் அடிப்படையில் தற்போது சமூகத்தில் மீண்டும் ஓர் ஐயப்பாட்டினை உருவாக்கி வருகிறார்கள். இந்த வர்த்தமானியில் இருப்பது இரண்டு பதங்களுக்கிடையிலான போட்டியாகும்

இந்நிலையில், இந்த சிக்கலைத் தீர்த்துவைக்குமாறு நாங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கூறுகிறோம். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்ற தினத்தையும் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற திகதியையும் உடனடியாக அறிவிக்க வேண்டும் என்றார்.

## ரூ.5 இலட்சத்தை செலுத்தினார் சட்டத்தரணி

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்த சட்டத்தரணி அனுர லக்சிறியின் மனுவை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம் சட்டச் செலவுகளுக்காக 500,000 ரூபாயை செலுத்துமாறு உத்தரவிட்டிருந்தது.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கூடாது என சட்டத்தரணி அருண லக்சிறி தனது மனுவில் கோரியிருந்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான அர்ஜுன ஒபேசேகர, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற மூவரடங்கிய நீதியர்சர்கள் குழாம் மனுவை ஜூலை 15 அன்று, தள்ளுபடி செய்தது.

இந்த மனுவைத் தொடர சட்டப்பூர்வ ஆதாரம் இல்லை என்று கூறி மனுவை தள்ளுபடி செய்ய உயர் நீதிமன்றம் மனுதாரருக்கு 500,000 ரூபாய் வழக்குச் செலவு கட்டணத்தை செலுத்துமாறு உத்தரவிட்டிருந்தது. அந்த தொகையையே மனுதாரரான சட்டத்தரணி அருண லக்சிறி, நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) செலுத்தினார்.

# கடனுடன் விழித்தெழுந்து, வட்டியுடன் கழியும் பொழுது

இருப்பவர்கள் வாழ்கின்றனர்; இல்லாதவர்கள் பொழுதைக் கழிக்கின்றனர்; இரண்டும் கெட்டான் நிலையில் இருப்பவர்கள், கடனுடன் விழித்தெழுந்து, வட்டியுடன் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர். எனினும், அதனை வெளியில் சொல்லமுடியாமலும் விழுங்க முடியாமலும் பலரும் இருக்கின்றனர்.

கொரோனாவுக்குப் பின்னர் நாட்டின் பொருளாதாரம் அதாள பாதாளத்தில் விழுந்தது. பலரும் வேலைகளை இழந்தனர். புதிய வேலைகளுக்கு முயற்சித்தனர். பின்னர், வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதைப் புரிந்துகொண்ட பலரும் படையெடுத்து விட்டனர்.

எனினும், சிக்கிக்கொண்டவர்கள் தங்களுடைய குடும்பத்தைக் கொண்டு நடத்துவதற்காக, தங்க ஆபரணங்களை அடகு வைத்து வாழத்தொடங்கினர்.

அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களை வட்டியுடன் திரும்ப முடியாமல் போனதால் பலரும் குட்டிபோட்ட வட்டித் தொகையையே செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

சிறுக, சிறுக சேமித்து ஓரளவுக்குப் பெறுமதியான தங்க நகைகளைக் கொள்வனவு செய்தவர்களில், பெரும்பாலான நகைகள் அடகுக் கடைகளிலேயே பத்திரமாய் இருக்கின்றது. இன்னும் சிலருடைய நகைகள், முதலுடன் வட்டியை செலுத்தாமையால் மூழ்கிப் போய்விட்டன.

இந்நிலையில்தான் வங்கிகளில் தங்க நகைகளை அடகு வைத்துள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், செவ்வாய்க்கிழமை (23) கூடிய அமைச்சரவையில் அங்கிகாரம் கிடைத்துள்ளது. ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டில் சமீபகாலமாக நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடியானது பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்துள்ளதுடன், இதன் விளைவாகத் தங்கப் பொருட்களை அடமானம் வைப்பது வேகமாக அதிகரித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, உரிமம் பெற்ற வங்கிகளில் அடமான முன்பணம் பெற்ற குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

உரிமம் பெற்ற வங்கிகளில் 2024 ஜூன் 30, அன்று அல்லது அதற்கு முன்னர் தனிநபர் அடிப்படையில் வாடிக்கையாளர்கள் ரூ.100,000க்கு மிகாமல் அடமான முன்பணங்களுக்கு ஆண்டுக்கு அதிகபட்சமாக 10 சதவீதத்துக்கு உட்பட்டு, வட்டி மானியத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொருட்களின் விலைகள் அதிகரிக்கப் படும்போது சேவைகளின் கட்டணங்களும் கூடுகின்றன. இவையிரண்டின் தாக்கத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் மக்கள் தவிக்கின்றனர். இவ்வாறான நிலையில், பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்போது, பொருட்களின் விலைகள் குறைவதும் இல்லை. சேவைகளின் கட்டணங்கள் மாற்றப்படுவதும் இல்லை. இது, சாதாரண மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை செலுத்தும் காரணிகளாகும்.

அடமான முற்பணங்களுக்கான வட்டி மானியம் நல்லதொரு தீர்மானமாக இருந்தாலும், முற்பணத்தை திரட்டவேண்டுமாயின், செலவுகள் குறைவேண்டும். அரசாங்கத்தால் ஒருசில பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. எனினும், பெருமுதலைகள் முழுமையாக விழுங்கிவிடுகின்றன. இதனால், மானியத்தில் பயனேதும் இல்லையென்பதே எமது அவதானிப்பு. எனினும், மானியம் வரவேற்கத்தக்கது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்கறை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்துபோன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களிலிருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை. இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும். எனவே சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மரக் கிளைகளை அகற்றுங்கள்

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் 2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் புனரமைக்கப்பட்ட வீதிகளின் இரு மருங்கிலும் பற்றைகள் மரங்கள் வளர்ந்து போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவில், மாங்குளம்-ஒட்டுசுட்டான் வீதி, நெடுங்கேணியில் இருந்து ஒதியமலை செல்லும் வீதி, மாங்குளத்தில் இருந்து மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளுக்குச் செல்லும் வீதிகள், கிளிநொச்சியில் பூநகரியில் இருந்து முழங்காவில் செல்லும் வீதிகளில் பற்றைகள் மரங்கள் வளர்ந்திருப்பதனால் விபத்துகள் ஏற்படுவதுடன் யானைகளினாலும் மக்கள் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

வீதிகளுக்குப் பொறுப்பான திணைக்களங்கள் மரங்களை அழிக்காமல் இடையூறாக உள்ள கிளைகளையாவது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்



## ஜனாதிபதித் தேர்தலா?

# சர்வஜன வாக்கெடுப்பா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

கடந்த வாரம் நாம் ஆராய்ந்த விடயத்தின் தொடரச்சியாகவே இக்கட்டுரை எழுதப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கபப்டவிருக்கும் நிலையில், அரசாங்கம் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது. ஜனாதிபதியினதோ அல்லது பாராளுமன்றத்தினதோ பதவிக் காலத்தை நீடிப்பதோடு மட்டுமே சம்பந்தப்பட்ட ஒரு விடயத்துக்காக அரசாங்கம் அரசியலமைப்பை திருத்த அவசரப்படுவது ஏன்?

ஜனாதிபதியினதோ அல்லது பாராளுமனறத்தினதோ பதவிக் காலத்தை நீடிக்க அரசாங்கம் முயல்கிறதா? அவ்வாறு எதையும் அவ்வரசியலமைப்புத் திருத்தத்தால் செய்ய முடியாது. உத்தேச அரசியலமைப்புத் திருத்தத்துக்கான சட்டமூலம், அதாவது 22ஆவது அரசியலமைப்புத் திருத்த சட்டமூலம் கடந்த 18ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவ்வாறான எந்தவொரு நோக்கம் இருப்பதாகவும் தெரியவில்லை.

அந்த அரசியலமைப்பு திருத்தம் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை பாதிக்கலாம் என்று எதிர்க்கட்சிகள் அச்சம் தெரிவித்த நிலையில், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை அதனை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டாம் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கடந்த 18ஆம் திகதி தமது அமைச்சின் செயலாளரைப் பணித்தார். ஆனால், அதனை பிரசுரிக்குமாறு ஜனாதிபதி ரணில் அன்றே சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்தார். அதன்படியே அது பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக் காலம் 5 வருடங்களாக இருந்த போதிலும், அப்பதவிக் காலத்தை ஆறு வருடங்களுக்கு மேல் நீடிப்பதாக இருந்தால் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் மக்களின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று அரசியலமைப்பின் 83 (ஆ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஆறு என்ற சொல்லுக்குப் பதிலாக ஐந்து என்ற சொல்லை குறிப்பிடுவதற்கே இந்த திருத்தம் கொண்டுவரப்படவிருக்கிறது.

அதில் என்ன முக்கியத்துவம் இருக்கிறது? தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிய அறிவித்தலை வெளியிட இருக்கும் நிலையில், அந்த அரசியலமைப்புத் திருத்தம் வர்த்தமானியில் வெளியிட அரசாங்கம் அவசரப்பட்டது ஏன்?

இதனிடையே இந்தத் திருத்தத்தை நியாயப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க காலியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றினார்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமே ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக் காலம் 6 வருடங்களிலிருந்து 5 வருடங்களாகக் குறைக்கப்பட்டது. அந்தத் திருத்தத்தை வரைந்த முன்னாள் எம்.பி. ஜயம்பத்தி விக்ரமரத்ன அனுபவம் குறைந்தவர் என்பதால் அவர் 83 (ஆ) உறுப்புரையின் உள்ள ஆறு என்ற சொல்லையும் ஐந்து என்று மாற்றத் தவறியுள்ளார் என்றார்.

தற்போது பப்புவா நியூகினியாவில் தங்கியிருக்கும் விக்ரமரத்ன அதனை மறுத்துக் கடந்த சனிக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டார். 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தனி ஒருவரால் வரையப்பட்டதொன்றல்ல என்றும் அது ஐந்து பேர் கூட்டாகச் செய்த பணியென்றும் அந்த ஐந்து பேரின் பணிகளைப் பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அமைச்சரவை உபகுழுவொன்று மேற்பார்வை செய்தது என்றும் 83 (ஆ) உறுப்புரையில் செய்யப்பட வேண்டிய மேற்படி சொல் மாற்றம் கூட்டாக எடுக்கப்பட்ட முடிவொன்றாகும். வேண்டுமென்றே மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் அதில் தெரிவித்திருந்தார். அதற்கான காரணத்தையும் அவர் விளக்கியிருந்தார். சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படும் எந்தவொரு மாற்றத்தையும் செய்வதில்லை என்ற பொதுவான உடன்பாடொன்றின் அடிப்படையிலேயே 19ஆவது திருத்தம் வரையப்பட்டது என்றும் 83ஆவது உறுப்புரையில் ஏதாவது மாற்றம் செய்வதாக இருந்தால் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று அந்த உறுப்புரையிலேயே குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அந்த உறுப்புரையில் அன்று கைவைக்கவில்லை என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தார்.

உண்மை தான். அரசியலமைப்பில் 1,2,3,6,7,8,9,10 மற்றும் 11 ஆகிய உறுப்புரைகளிலும் 'இந்த உறுப்புரையிலும்' (அதாவது 83ஆவது உறுப்புரையிலும்) ஏதாவது மாற்றம் செய்வதாக இருந்தால் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று 83ஆவது உறுப்புரையின் (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது 83 (ஆ) உறுப்புரையில் ஆறு என்ற சொல்லை ஐந்து என்று மாற்றவும் அன்று சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தியிருக்க வேண்டும். எனினும், சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படும் மாற்றங்களைச் செய்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டு இருந்தமையால் அது அன்று மாற்றாமல் கைவிடப்பட்டுள்ளது.

இப்போது அரசாங்கம் அந்த சொல் மாற்றத்தை மேற்கொள்ளப் போகிறது. அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவையாகிறது. அன்று 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் வரைவை மேற்பார்வை செய்த ரணிலுக்கு இது தெரியாதா? அவர் இந்த வரலாற்றை மறந்து விட்டாரா?

உத்தேச அரசியலமைப்பு திருத்தத்தினால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்னாயக்க கூறியுள்ளார். சட்டப் படி பார்த்தால் அது உண்மை தான். ஆயினும் நடைமுறையில் அது ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்கலாம் என்றே தெரிகிறது.

இத்திருத்தத்தைப் பற்றி சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு முன்னர் அதனை முதலில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். அதாவது 150க்கு மேற்பட்ட எம்.பிக்கள் அதற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

அவ்வாறானதோர் ஆதரவை ஜனாதிபதியால் திரட்ட முடியுமா? இதற்குப் போதியளவு எம்.பிக்கள் ஆதரவளிக்காவிட்டால் பாராளுமன்றத்தை உடனடியாக கலைத்துவிடுவதாக ஜனாதிபதி மிரட்டி வருவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட கூறியுள்ளார்.

தற்போதைய பாராளுமன்றத்துக்கு ஐந்து வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர், ஜனாதிபதி அதனைக் கலைத்தால். முதன்முதலாக 2020இல் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தமது பாராளுமன்ற ஓய்வூதியத்தை இழப்பர். எனவே, எந்தக் கட்சியைச் சேர்ந்தாலும் அவ்வாறானவர்கள் அந்த மிரட்டலுக்கு அஞ்சி இந்தத் திருத்தத்துக்கு ஆதரவளிக்கலாம்.

அத்திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால் அடுத்த கட்டமான சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும்.

அது எப்போது நடைபெறப் போகிறது?

சட்டமூலமொன்று வர்த்தமானியில் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு வாரத்துக்குப் பின்னரே அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அதனை அடுத்து பொது மக்கள் அது தொடர்பாக நீதிமன்றத்தில் மனுக்களைச் சமர்ப்பிக்க மேலும் இரு வாரங்கள் அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்ற விசாரணைக்கும் சில நாட்கள் தேவைப்படும் என்றும் எனவே, அடுத்த மாதம் (ஒகஸ்ட் மாதம்) இறுதியிலேயே இவ்வரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட முடியும் என்றும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை கூறினார்.

அதற்குப் பின்னரே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதன் பிரசார பணிகளுக்கும் சுமார் ஒரு மாத காலம் வழங்கப்படும். அதாவது செப்டெம்பர் மாத இறுதியிலேயே சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதாக இருந்தால் நடத்த முடியும். அதே நாட்களில் தான் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறப் போகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தல் இவ்வாரம் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் அர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க கூறியுள்ளார். அவர் அதனை அவ்வாறே செய்தால் அந்த அறிவித்தலிலிருந்து 63 நாட்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதாவது அத்தேர்தல் செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். அத்தேர்தலும் சர்வஜன வாக்கெடுப்பும் ஒரே நாட்களில் நடைபெறும் நிலை ஏற்பட்டால் மக்கள் மனதில் பெரும் குழப்பம் ஏற்படலாம் அதுவே ஜனாதிபதியின் முயற்சியாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திப் போடுவதாகும். ஏனெனில், சட்டப்படி ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப் போட முடியாது. உத்தேச அரசியலமைப்புத் திருத்தம் இப்போதைக்கு எவ்வித பயனையும் அளிக்கப் போவதில்லை என்பது தெளிவாக இருப்பதால் அதற்கான சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திப் போடுவதால் எவ்வித நட்டமும் எவருக்கும் ஏற்படப் போவதில்லை.

இதனை விட்டுவிட்டு அதற்காக வீணாகச் செலவழிக்கப் போகும் சுமார் 1,000 கோடி ரூபாவை பாவித்துக் கடந்த வருடம் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இதற்கு சில மாதங்களுக்கு முன்னர் நடத்தியிருக்கலாம். இவ்வாறானதொரு குழப்ப நிலை ஏற்படலாம் என்பதை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு விளங்கவில்லையா? அதனை அறிந்தும் இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை வர்த்தமானியில் வெளியிட அவசரப்பட்ட ஜனாதிபதி, சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திப் போட விரும்புவாரா? என்பதே அடுத்த கேள்வியாகும். அவர் எதற்காக இந்த விடயத்தில் உறுதியாக இருக்கிறார் என்பதை எதிர்வரும் வாரங்களில் தான் விளங்கிக்கொள்ள வேண்டும்.

# " உலகை மாற்றும் ஒரே ஆயுதம் கல்வி"

## ஜூலை 18, சர்வதேச நெல்சன் மண்டேலா தினம்



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்

"உலகை மாற்றும் ஒரே ஆயுதம் கல்வி" என கல்வியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியவர் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான நெல்சன் மண்டேலா. அவரது 106ஆவது பிறந்த தினம் ஜூலை 18ஆம் திகதியாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின் படி, ஒவ்வோர் ஆண்டும் அவரது பிறந்த தினமான ஜூலை 18ஆம் திகதியை "சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக" ஐக்கிய நாடுகள் சபை 2010ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டாடி வருகின்றது.

மனிதத்துவம் நோக்கிய அவரது அர்ப்பணிப்பு, மோதல், முரண்பாடு சம்பந்தமான தீர்வுகள், பாலின சமத்துவம், குழந்தைகளுக்கான உரிமைகள், பாதிக்கப்பட்ட குழுக்களுக்கான நலன்களில் அக்கறை செலுத்துதல், அவரது 67 வருட பொதுச் சேவையைக் கௌரவித்தல், இன்னும் அவரது இன்னோரன்ன செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அவற்றை அங்கீகரிக்கும் முகமாக ஐ.நா. சபை இத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது எனலாம்.

இவர் சமூக நீதி, ஆண்-பெண் சம உரிமை, மனித உரிமை மேம்பாடு, இனங்களுக்கிடையிலான நல்லுறவை ஏற்படுத்தல், வறுமைக்கு எதிரான போராட்டம், கலாசார ரீதியான பன்முகத்தன்மை, நிலச் சீர்திருத்தம், சுகாதார முறைகளை மேம்படுத்தல், போன்றவற்றில் தன்னை முழுமையாக அர்ப்பணித்ததன் காரணமாக, இவர் உலகளாவிய ரீதியில் இன்றும் போற்றப்படும் ஓர் உன்னதமான தலைவராகக் கருதப்படுகின்றார்.

அவர் தனது வாழ்க்கையை மனித உரிமை சட்டத்தரணியாக, போராளியாக, சிறைக் கைதியாக, சர்வதேச சமாதான ஏற்பாட்டாளராக, சுதந்திரத் தென்னாபிரிக்காவின் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியாக விளங்கினார்.

தென்னாபிரிக்க விடுதலைக்காக 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து, அங்கிருந்து கொண்டே தென்னாபிரிக்காவின் விடுதலைக்காக, நிறவெறி ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்.





சட்ட விதிகள், பேச்சுச் சுதந்திரம் , சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தல் முறை ஆகியவற்றை அந்த நாட்டு மக்களுக்கு நெல்சன் மண்டேலா அறிமுகப்படுத்தினார்.

"சமாதானம் இல்லாமல் நீதி இல்லை", "இன நல்லிணக்கம் இல்லாமல் ஜனநாயகம் இல்லை", என்ற கருத்தை முன்வைத்து தனது செயற்பாட்டை மேற்கொண்டவர்.

உலகளாவிய ரீதியில் வாழ்ந்த கறுப்பின மக்கள் அவரைச் சுதந்திரப் போராட்ட வீரர் என வர்ணித்துக் கொண்டிருந்த பொழுது, தென்னாபிரிக்க வெள்ளையர் அரசாங்கமோ அவரைப் பயங்கரவாதியாகச் சித்தரித்தது.

ஐக்கிய அமெரிக்காவை ஆபிரகாம் லிங்கன் எவ்வாறு ஒற்றுமைப்படுத்தினாரோ, அதேபோல, நெல்சன் மண்டேலா பிளவுபட்டிருந்த தனது நாட்டை ஒற்றுமைப்படுத்தினார்.

உலகின் பலம் வாய்ந்த ஆயுதங்களை விட, மன்னிப்பு , விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, மற்றவர்களை மதிப்பது என்பனவே பலம் வாய்ந்த ஆயுதங்களெனக் கருதினார்.

"நேர்மையான மனிதனாக ஒருவர் வாழ வேண்டுமென்றால், அதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தவர் நெல்சன் மண்டேலா எனவும் ஒருவர் நிலை குலையாத உறுதி, தைரியம், வீரம், அமைதி, புத்திசாலித்தனம், திறமை ஆகியவற்றைக் கொண்ட மனிதனாக இருக்க வேண்டுமென்றால் அதற்குச் சிறந்த உதாரணமாக இருந்தவர் நெல்சன் மண்டேலா" என கியூபா நாட்டின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோ குறிப்பிட்டிருந்தார்.

தலைவனே ஒரு நாட்டின் அடையாளம், அவனுக்கே சமூகத்தின் தேவைப்பாடுகள் தெரியும் என்பதனை நன்கு அறிந்தவர்.

நாட்டின் நன்மைக்காக சில வேளைகளில் தலைவன் சில தற்றுணிபானத் தீர்மானங்களை எடுப்பது அவசியமெனக் கருதினார்.

தனது ஐந்து வருட ஜனாதிபதிப் பதவிக் காலம் நிறைவுற்றதுவும் கௌரமாகவும், மரியாதையாகவும், தனது பதவியை ஏனையவர்களுக்குக் கையளித்து விட்டு , அரசியலிலிருந்து ஒதுங்கி விட்டார்.

> **உலகளாவிய ரீதியில் வாழ்ந்த கறுப்பின மக்கள் அவரைச் சுதந்திரப் போராட்ட வீரர் என வர்ணித்துக் கொண்டிருந்த பொழுது, தென்னாபிரிக்க வெள்ளையர் அரசாங்கமோ அவரைப் பயங்கரவாதியாகச் சித்தரித்தது**

அவருடைய ஆதரவாளர்கள் அவரை மீளவும் தலைமைத்துவப் பதவியை ஏற்குமாறு கோரிக்கை விடுத்தும், அவர் அதனை நிராகரித்து விட்டார்.

"எனது வெற்றிகளின் மூலம் என்னை மதிப்பிடாதீர்கள், எத்தனை முறை நான் கீழே விழுந்து மீண்டும் எழுந்தேன் என்பதன் மூலம் மதிப்பிடுங்கள்" என்று குறிப்பிடுகின்றார். இது எம்மனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரு கருத்தாகும்.

ஆம்! நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் முன்னேறி வருவதற்கு எத்தனையோ தடைகள், அவமானங்கள், கஷ்டங்கள், வேதனைகள், துன்பங்கள், துயரங்கள் போன்றவற்றைக் கடக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு கடந்து இறுதியிலேயே நாம் வெற்றியடைய முடிகின்றது. இதுவே யதார்த்தம். எனவே, இவரது வாழ்வியல் வரலாறு எமக்கு ஒரு நல்ல பாடமாக அமைகின்றது. இவரது நூலான "*Long Walk to Freedom*", அனைவராலும் வாசிக்கப்பட வேண்டிய ஒன்றாக அமைகின்றது. தற்போதைய தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ராமபோச 2019ஆம் ஆண்டு இலங்கைக்கூடாக வெளிநாடொன்றுக்குச் செல்லும் பொழுது , அவரை சந்தித்து, அளவளாவும் வாய்ப்பொன்று எனக்கு கிடைத்தது.



அத்தருணத்தில் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாப் பற்றி, நாம் இருவரும் சம்பாஷித்தது இன்றும் என் மனக் கண் நிழலாடுகிறது. அனைத்து நாட்டுத் தலைவர்களும். நெல்சன் மண்டேலாவது செயற்பாடுகளைப் பின்பற்றினால், அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என்பது ஒரு நம்பிக்கை, எதிர்பார்ப்பு.

# பால்நிலை ரீதியாக நூல் விமர்சனம் பால்நிலை (Gender)



திருச்செல்வம் ஜனனீ
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பால்நிலை என்பது ஆண்-பெண் என்னும் இரு உயிரிகளிடையே காணப்படும் உடலியல் ரீதியிலான வேறுபாட்டை காட்டி நிற்கிறது. ஆண் மற்றும் பெண்களிடையே இனப்பெருக்க முறைமையானது உள்ளக மற்றும் வெளியக ரீதியில் செயற்படுகிறது. இது பிறப்பின் போது, ஆணுக்கும் பெண்ணுக்கும் காணப்படும் வேறுபட்ட நிற மூர்த்தங்கள், ஓமோன்களின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. உலகில் பிறக்கின்ற எல்லா உயிர்களுக்கும் பால் வேறுபாடானது இன விருத்தி உறுப்புக்களால் (பால் உறுப்புக்களால்) இயற்கையாகத் தீர்மானிக்கப்படுகிறது

பால்நிலை என்பதை வரைவிலக்கணப்படுத்துவது மிகவும் கடினமானதாகும். ஆனால், பால்நிலை என்பது ஒரு குறிப்பிட்ட பண்பாடுடைய குழுமத்தினர் அல்லது சமூகம் ஆண்- பெண் என்னும் உயிரியல் வேறுபாடு தொடர்பாகக் கொண்டிருக்கும் மதிப்பீடுகளாகும். தனிநபர்களுடைய பால் நிலை ரீதியான சமூகப் பாத்திரங்கள் மற்றும் பாலின அடையாளம் என்பனவும் பால்நிலை என்பதனுள் அடங்கும்.

பால்நிலையானது சமூகத்திற்குச் சமூகம் வேறுபடமுடியும். புவியியல் எல்லை அடிப்படையில், இன, மத மற்றும் அவர்கள் பின்பற்றும் பண்பாட்டின் அடிப்படையிலும் கூட மாற்றமடையமுடியும். பால்நிலை ரீதியான சமூகப் பாத்திரங்கள் சிலசமூகங்களில் இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. சிலசமூகங்களில் ஆண் பெண்ணுக்கான நியமங்கள் கூட சமூகத்தால் கட்டமைக்கப்பட்டிருக்கும்.

பாலினப் புதுமையினரின் பால்நிலை சார்ந்த மதிப்பீடுகளையும் சமூகம் உருவாக்குகின்றது. கால அடிப்படையிலும் பால்நிலையானது மாற்றமடைகிறது. 1990களில் வாழ்ந்த பெண்ணுடைய பால்நிலை ரீதியான கட்டமைப்பும் 2024ஆம் ஆண்டில் வாழ்கின்ற பெண்ணுடைய பால்நிலை ரீதியான கட்டமைப்புக்கும் பாரிய வேறுபாட்டைக் காணக் கூடியதாகவுள்ளது.

நூல் : கழிவறை இருக்கை
நூலாசிரியர் : லதா
முதல் பதிப்பு : 2020
பக்கங்கள் :247

கழிவறை இலக்கியம் தலைப்பில் இக்கட்டுரை நூலானது லதா அவர்களினால் அவரது வாழ்வில் நடந்த அனுபவங்களிலிருந்து இந்த நூலை எழுதியுள்ளார். இதில் என்னதான் நாம் புத்தகங்கள் எழுதினாலும் பலகாலமாக நம் சமூகம் ஆணாதிக்க சமூகமாகவே இருந்துவந்துள்ளது. பெண்கள்தான் அதிகமாக அடிமைப்பட்டு வாழ்கிறார்கள் என்னும் உண்மையை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இப் புத்தகமானது பொதுவில் இரு பாலாரையும் வைத்தே அலசியுள்ளது.

1. வாழ்வின் அடிப்படைதேவைகள்
2. தகாதவார்த்தை
3. பெண்ணும் சமூகமும்
4. உடல் உள்ளம் சங்கமிப்பு
5. ரகசியம் ஒடுக்கம் மற்றும் கல்வி
6. கழிவறை இருக்கை
7. காமத்தை தவறென கருதுவதால் ஏற்படும் விளைவுகள்
8. காதலின் வெளிப்பாடாக காமம்
9. திருமணம் தாண்டியஉறவுகள்
10. நம்பிக்கையை கடந்து
11. நட்பே அடித்தளமாக
12. பரிதவிப்பு
13. சுயஇன்பம்
14. ஈர உரையாடல்கள்
15. திருமணம் எனப்படும் அமைப்பு
16. திருமணமும் குடும்பமும்
17. சொந்தகொண்டாடும் மனப்பான்மை
18. ஒருவரையொருவர் முழுமையாக்குதல்
19. மனத்தடைகளின் நீக்கம்
20. ஆண் அகந்தை,
21. பாலியல் கல்வி
22. உணவும் உடலுறவு
23. பெண்களின் உடலுறவுகுறித்து ஆர்வமின்மை,
24. சமூகக் கட்டமைப்புகள்
25. நல்லுறவிற்கான சில விதிமுறைகள்
26. குழந்தை விளையாட்டு
27. காதல் மற்றும் காமம் குறித்த கட்டுக் கதைகள்
28. நம் கோட்பாடுகளின் வழி ஒரு பார்வை
29. அனுதினமும் பேணப்படவேண்டியதா திருமண உறவு
30. காமத்திற்கு வயது என்ன
31. குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகள் பெற்றோர்களின் மனப்பாங்கு
32. இப்போதையதேவைகளையும் எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையும்

என ஒட்டுமொத்தமாக இந்நூலானது 32 அத்தியாயங்களை உள்ளடக்கியதாக 224 பக்கங்கள் வரை கொண்டதாக அமைந்துள்ளது.

கழிவறை இருக்கை புத்தகமானது ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரும் வாசிக்க வேண்டியதொன்றாகும். இப்புத்தகமானது நன்றாகக் கலவி கொள்வதற்கான வழிமுறைகளையோ, சந்தோசமாக வாழ்வதற்கான குறிப்புகளையோ பற்றியது அல்ல, மாறாக நமது சமுதாயத்தில் காமத்தை எந்த பார்வை கொண்டு பார்க்கின்றார்கள், அதை எப்படிக் கையாளுகின்றார்கள் அந்த வார்த்தையானது எப்படி தவறான வார்த்தையாக உருவெடுத்து என்பது பற்றி ஒரு அலசலை முன்வைக்கும் முயற்சியே ஆகும். லதா அவர்கள் தனது வாழ்க்கையில் தனக்கு நடந்த மற்றும் தான் சந்தித்த நபர்களின் வாயிலாக பாலியல்சார் வன்முறைகள் மற்றும் மனிதர்களுடான தனது விவாதங்கள் நண்பர்களின் அனுபவங்கள் என்பவற்றை அடித்தளமாக வைத்து இப்புத்தகமானது காணப்படுகிறது. காலம் காலமாக ஆணாதிக்க சமுதாயத்தின் போர்வைக்குள் இருக்கும் நாம் சற்று வேறுபட்ட சிந்திப்பின் நோக்க வேண்டிய தேவை உள்ளது.




அந்தவகையில், காமத்தை இரு பாலருக்கும் பொதுவில் வைத்தே இப் பனுவலானது படைக்கப்பட்டுள்ளது.

01.வாழ்வின் அடிப்படைத் தேவைகள் வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றுடன் காமத்தை நான்காவதாக இணைத்துக் கூறியுள்ளார். மற்றும் ஆதிகால மனிதன் கலவியினால் ஏற்படும் இன்பத்தால் நாவில் ருசிக்கு முன்னமே உணர்ந்திருப்பான. இதன் வாயிலாக முன்பு காமம் வெட்கமான விடயமாகப் பார்க்கப்படவில்லை என்பது புலனாகின்றது. நாகரிக வளர்ச்சியின் பிற்பாடு ஆண்-பெண் இருபாலருக்கும் காமத்தை அனுபவிப்பது என்பது வெட்கமான கூச்சமான விடயமாக மாறிவிட்டது. இதை ஒரு பாவமான காரியம் என்றும் சிந்திக்கின்றார்கள். காமச் செயற்பாடு உணர்வுகளினானது, அது இயற்கையானதொன்றாகும். அதனை மறைத்து வைப்பதனால் தான் மனித மனப்பிறழ்வான நிலைகள் உண்டாகிறது. அதற்குச் சரியான வழி அதனை மறைத்து வைப்பது என்பது தடுப்பது என்பது தீர்வல்ல.

02. தகாத வார்த்தைகள் காமத்தினை தகாத வார்த்தைகளைக் கருதாமல் காமம் குறித்த உரையாடல்கள் வெளிப்படையாக இருக்கும் பட்சத்தில், நாம் வாழும் சமூகத்தில் நடந்து கொண்டிருக்கும் வன்புணர்வுகள், பாலியல் தொந்தரவுகள், மனப் பொருள்களின் வழியாய் நடக்கும் விளைவுகளைக் குறைக்கவும் நம் வருங்கால சந்ததியினரை இம்மாதிரியான மனரீதியான பிரச்சினைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ளலாம். மேலும், கணவன்-மனைவிக்குள் நெருக்கம் கூடி கலவி அழகாகி இருபாலருக்கு நட்பு அதிகமாகும். இப்படியான சமூகம் உருவாகினால் காமம் என்பது தகாத வார்த்தையாக இருக்காது.

03.பெண் சமூகமும் இச்சமுகத்தில் ஆண் காமம் பற்றி பொதுவில் பேசும் போது, அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது. அதே பெண்கள் பேசினால் அவளை இச்சமூகம் அந்த மாதிரி பெண் என்கின்ற முத்திரைகுத்துகின்றது. (எந்த ஆணுடனும் கலவியில் ஈடுபடத் தயாராக இருக்கும் பெண்- ஆண் வளரும் முறைகளில் வேறுபாடு உள்ளது. ஒரு பெண் ஆணை வெளிப்படையாக நெருங்க மாட்டாள் என்று நமது சமூகம் அனுமானித்துள்ளது. ஆனால், அவளுக்கும் உணர்வுகள் உண்டு. ஆனால், அவள் வெளிப்படுத்துவது கிடையாது அதை இந்த விதமான சலனங்களும் இன்றி ஏற்றுக் கொள்வது நமது சமுதாயத்தில் சாதாரணமாகி விட்டது. உளவியல் ரீதியாகப் பெண்கள் ஆண்களுக்காகப் படைக்கப்பட்டதான கருத்து வேரூன்றிக் கொண்டுதான் இருக்கும். இதன் காரணமாகவே, காமம் என்று வரும் பொழுது, ஆணுக்குப் பெண் ஒரு போகப் பொருளாகவே தெரிகிறாள். இதை ஏற்றுக்கொள்வதில் பெரிய எதிர்ப்பு எதுவும் அவளும் காட்டுவதில்லை என்றே தோன்றுகிறது. அவள் ஏற்றுக்கொண்டு விட்டாள் இங்குப் பெண் என்பவள் தன் உணர்வுகளை வெளிப்படுத்தலாகாது என்று பார்க்கப்படுகின்றது. இதற்குப் பெண்ணும் இசைவாகி விட்டால் என்றுதான் கூற வேண்டும்.



எழுத்தாசிரியர் : லதா

04. உடலும் உள்ளமும் சங்கமிப்பு சமூகத்தில் காமம் வரும் உடல் சார்ந்த நிகழ்வாகவே பார்க்கப்படுகின்றது. பொதுவாக நாமெல்லாம் ஒரு ஆணின் விந்து வெளியேறினாலோ பெற்றுவிட்டாலோ மனிதர்களின் காம உணர்வுகள் பற்றப்படுகின்றன. அவர்கள் மகிழ்வடைகின்றனர். என்ற பிம்பத்தை ஏற்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உண்மையில் காமம் என்பது அங்கு இரண்டு உள்ளங்கள் இணைந்திருக்கும். காமம் என்பதை முழுமையாக அனுபவிக்க இருவரும் மனதில் ஒற்றுமையும் தெளிந்த இதயமும் வேண்டும் அதனை எப்படி என்று இந்தச் சமூகம் ஒத்துக்கொள்ளாது அப்படியில்லாத இச்சமூகத்தில் சுய இன்பமே மேலானது என்று கருதலாம். அன்பை இருவருக்குள் ஏற்படும் வேதியியல் இணைப்பாகக் கருதினால் காமம் என்பது இருவருக்குள் இருக்கும் உயிரியல் இணைப்பாகப் பார்க்கப்படுகின்றது.

05. இரகசியம் ஒடுக்கம் மற்றும் கல்வி காமம் குறித்தான கல்வியானது மிக அவசியமானதொன்று அது மறைத்து வைக்கக்கூடிய அவதூறான வார்த்தை அல்ல. சமூகத்தில் இதனாலதான் வன்முறைகள் துஷ்பிரயோகங்கள், பாலியல் சீண்டல்கள் போன்றவற்றிற்கு இவையே அடித்தளமாகும். மற்றும் காமம் குறித்த அறிவின்மையால் திருமணத்திற்கு பின்வரும் பிள்ளை பெற்றிற்காக மட்டும் கலவையில் ஈடுபடும் தம்பதியினரும் சமூகத்தில் காணப்படுகின்றார்கள். இதற்கு காரணங்கள் பாலியல் கல்வியானது பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கற்பிக்கப்படுவதில்லையும் ஆகும. மேலும், பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பது கிடையாது.

தொடரும்...

புதுடெல்லி

### மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்தார்

# நிர்மலா சீதாராமன்

பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த 22ஆம் திகதி ஆரம்பமான நிலையில், இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் ஆகஸ்ட் 12ஆம் திகதி வரை மொத்தம் 19 அமர்வுகளுடன் நடைபெறவுள்ளது.

இதன் ஒரு பகுதியாக மக்களவையில் பொருளாதார ஆய்வறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அன்றைய தினம் தாக்கல் செய்தார். கடந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து விளக்கும் ஆய்வறிக்கை இதுவாகும்.

இதனையொட்டி 2024-2025ஆம் நிதி ஆண்டுக்கான முழு பட்ஜெட்டை பாராளுமன்றத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செவ்வாய்க்கிழமை(23) காலை 11 மணிக்கு தாக்கல் செய்து உரை நிகழ்த்தினார்.

முன்னதாக குடியரசுத் தலைவர் திரெளபதி முர்முவை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ராஷ்டிரபதி பவனில் சந்தித்தார். அப்போது நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் நகலை குடியரசு தலைவர் திரெளபதி முர்முவிடம் அளித்து ஒப்புதலை பெற்றார்.

அதே சமயம் பட்ஜெட் உரையை பெற்றுக்கொண்ட



குடியரசுத் தலைவர் திரெளபதி முர்மு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு இனிப்பு ஊட்டி தனது வாழ்த்துகளை தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை கூட்டம் கூடியது. இந்த கூட்டத்தில் மத்திய அரசின் பட்ஜெட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது.

செங்கல்பட்டு

### குளவி கொட்டு மரணத்தால்

## பீதியில் மக்கள்



செங்கல்பட்டு மாவட்டம் புலியூர் பஞ்சாயத்து அச்சரவாக்கம் கிராமத்தை சேர்ந்த வீரராகவன் என்ற முதியவர், அங்குள்ள காட்டுப் பகுதியில் விறகு வெட்டிக் கொண்டிருந்தார்.

அப்போது, குளவி ஒன்று வீரராகவனை கொட்டியுள்ளது. அவரை அப்பகுதியினர் மீட்டு, செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிக்கிச்சைகாக அனுமதித்தனர். ஆனால் அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த நிலையில், வீரராகவன் குளவி கொட்டி இறந்ததை அறிந்த புலியூர் ஊராட்சி மக்கள் அந்தப் பகுதியில் வேலை செய்வதற்கு அச்சமடைந்துள்ளனர்.

அந்தப் பகுதியில் பல்வேறு இடங்களில் குளவிகள் கூடுகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் அந்தப் பகுதியில் செல்வதற்கு அச்சம் அடைகின்றனர். குறிப்பாக 100 நாள் வேலை செய்வதற்கு பெண்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளதால் அங்கு பரபரப்பு நிலவி வருகிறது.

பல்லடம்

### குவியல் குவியலாக கண்டெடுக்கப்பட்ட

## போதை ஊசிகள்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே கரைப்புதூர் ஊராட்சி, சின்னக்கரை பகுதியில் உள்ள காட்டுப்பகுதி ஒன்றில், ஊசியுடன் கூடிய நூற்றுக்கணக்கான சிரஞ்சுகள் மற்றும் போதைக்காக பயன்படுத்தப்படும் மாத்திரைகள் உள்ளிட்டவை குவியல் குவியலாக கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில், இந்திய மருத்துவர் சங்க தேசிய செயற்குழு உறுப்பினர் ராஜ்குமார் கூறுகையில், "வலி நிவாரணியாக பயன்படுத்தப்படும் மருந்து, மாத்திரைகளை போதைக்கு பயன்படுத்துவது இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

மருத்துவர்களின் பரிந்துரைப்படி மட்டுமே இவற்றை வழங்க வேண்டும். ஆனால், இணையம் மூலம், தடையின்றி கிடைப்பதால்தான் இந்த அவல நிலை ஏற்பட்டு வருகிறது. இதனால், உயிருக்கே அபாயம் உள்ளது" என்றார்.



கனடா

### சாகசப் பயணத்தில்

## தம்பதி பரிதாப பலி

அட்லாண்டிக் சமுத்திரத்தைப் படகில் கடப்பதற்காகச் சாகசப் பயணம் புறப்பட்ட ஒரு கனேடியரும் அவரது மனைவியும் கடந்த மாதம் மாயமானார்கள்.

கனேடியரான ப்ரெட்டும் (Brett Clibbery) பிரித்தானியரான அவரது மனைவி சாராவும் (Sarah Packwood), காற்றை மாசுபடுத்தும் பெட்ரோல் முதலான எவ்வித எரிபொருளும் இல்லாமல், சூரியசக்தி, பெட்டரிகள் போன்றவற்றின் உதவியுடன் இயங்கும் படகொன்றில், அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடப்பதற்காகப் பயணம் புறப்பட்டார்கள்.

ஆனால், கடந்த மாதம், அதாவது ஜூன் மாதம் 18ஆம் திகதி இருவரும் மாயமானார்கள். அவர்களுக்கு என்ன நேர்ந்தது



என்பது தெரியாத நிலையில், இம்மாதம், 12ஆம் திகதி, கனடாவின் Nova Scotiaஅருகே, Sable தீவில் அவர்கள் இருவரது உயிரற்ற உடல்களும் கரையொதுங்கின.

இந்நிலையில், தம்பதியருக்கு என்ன நடந்தது என்பது தெரியாத நிலையில், அதைக் கண்டுபிடிப்பதற்காக கனேடிய பொலிஸார் விசாரணை ஒன்றைத் துவக்கியுள்ளார்கள்.

பிரெட்டும் சாராவும் தங்கள் படகை விட்டுவிட்டு உயிர் காக்கும் படகொன்றில் பயணித்துக் கொண்டிருக்கும்போது, அவ்வழியே வந்த பெரிய சரக்குக் கப்பல் ஏதாவது இவர்களுடைய சிறிய படகின் மீது மோதியிருக்கலாம் என்னும் கோணத்தில் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

பிரெட் தனது சகோதரிக்கு தனது சிறுநீரகங்களில் ஒன்றை தானம் செய்வதற்காக லண்டன் வந்தபோது லாராவை சந்தித்துள்ளார்.

இருவரும், இப்போது அவர்கள் பயணித்துவரும் படகிலேயே, கனடாவில் வைத்து திருமணம் செய்துகொண்டார்கள்.

ஆக, தம்பதியரின் வாழ்வையும் திருமணத்தையும் போல, அவர்களுடைய மரணமும் கடலிலேயே நிகழ்ந்துவிட்டது.

எத்தியோப்பியா

### மண்சரிவில்

## 50 பேர் பலி

எத்தியோப்பியாவில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 50 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

மேலும் கடந்த 21ஆம் திகதியிலிருந்து கோபா பிரதேசத்தில் பெய்த கடும் மழையுடன் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளில் தற்போது நிவாரணக் குழுக்கள் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகின்றது.



காசா

### போர்களத்தில் இறந்த கர்ப்பிணியின்

## சிசுவை காப்பாற்றிய மருத்துவர்கள்

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன போருக்கு இடையில், இஸ்ரேலின் தாக்குதலால் உயிரிழந்த கர்ப்பிணியின் வயிற்றில் இருந்த ஆண் குழந்தையை மருத்துவர்கள் காப்பாற்றியுள்ள சம்பவம் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7, 2023 முதல் காசா மீது இஸ்ரேலும், இஸ்ரேல் மீது காசாவும் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதல்களில் அப்பாவி மக்கள் பலியாகி வருகின்றனர்.

இந்நிலையில், பலஸ்தீனம் அருகே நூசிராத் அகதிகள் முகாமில் இஸ்ரேலின் தாக்குதலால் உயிரிழந்த ஓலா அட்னன் ஹர்ப் என்ற கர்ப்பிணியின் வயிற்றில் இருந்த ஆண் குழந்தையை காசா மருத்துவமனை மருத்துவர்கள் அறுவை சிகிச்சையின் மூலம் காப்பாற்றியுள்ளனர்.

அறுவை சிகிச்சை மூலமாக குழந்தையை வெளியே எடுத்த மருத்துவர்கள் குழந்தைக்கு தொடர் சிகிச்சை அளித்துள்ளனர்.

தற்போது குழந்தை நலமுடன் இருப்பதாகவும் மருத்துவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியாவுக்கெதிரான இலங்கைக் குழாமில் சந்திமால்

இந்தியாவுக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் தினேஷ் சந்திமால் இடம்பெற்றுள்ளார். அந்தவகையில், இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான குழாமில் சந்திமால் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்கிரம, டில்ஷான் மதுஷங்க ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

இந்நிலையில் குசல் பெரேரா, அவிஷ்க பெர்ணாண்டோ, பினுர பெர்ணாண்டோ ஆகியோர் குழாமுக்கு மீளத் திரும்பியுள்ள நிலையில், சகலதுறைவீரரான சமிந்து விக்ரமசிங்க முதன்முறையாகக் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, வனிது ஹசரங்க பதவி விலகிய நிலையில், சரித் அசலங்க அணித்தலைவராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

குழாம்: சரித் அசலங்க (அணித்தலைவர்), பதும் நிஸங்க, குசல் பெரேரா (விக்கெட் காப்பாளர்), அவிஷ்க பெர்ணாண்டோ, குசல் மென்டிஸ் (விக்கெட் காப்பாளர்), தினேஷ் சந்திமால், கமிந்து மென்டிஸ், தசுன் ஷானக, வனிது ஹசரங்க, டுனித் வெல்லலாகே, மகேஷ் தீக்ஷன, சமிந்து விக்ரமசிங்க, மதீஷ பத்திரண, நுவான் துஷார, துஷ்மந்த சமீர, பினுர பெர்ணாண்டோ.



## Kish VPL 2024; தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் சம்பியன்




கொழும்பு-விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த "Kish விவேகன்ஸ் ப்றீமியர் லீக் 2024" கிரிக்கட் சம்பியன் கிண்ணத்தை தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் 27 ஓட்டங்களால் தம்மை எதிர்த்து போட்டியிட்டு எலக்கந்த ஜேடி போய்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணத்தை தம்வசப்படுத்தியது.

கொழும்பு-முவர்ஸ் மைதானத்தில் நடைபெற்ற அணிக்கு அறுவர் கொண்ட மென்பந்து கிரிக்கட் தொடரில் மொத்தமாக நான்கு குழுக்களின் கீழ் 21 அணிகள் கலந்து கொண்டன. குழுநிலைப் போட்டிகள், கால் இறுதி, அரை இறுதி, மாபெரும் இறுதிப் போட்டி என மொத்தமாக 52 போட்டிகள் நடைபெற்றன.

இறுதிப்போட்டியில், எம்.பிரதீப் தலைமையிலான எலக்கந்த ஜேடி போய்ஸ் அணியில் ஆர்.பிரணவன், ஆர்.ஜெசிந்தன், எஸ்.ஹரிஹரன், டி.விக்னேஸ், கே.சுலக்ஷன் ஆகியோரும் யூ.வாகீசன் தலைமையிலான தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் அணியில் ஆர்.வேலுசாமி,கே.பிரசாந்தன், ஜே.கிரிஷான், எஸ்.டிலக்ஸன் வி.சஞ்ஜீவன் ஆகிய வீரர்களும் களமிறங்கினர்.

இறுதிப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்களில் இரண்டு விக்கட்டுகளை இழந்து 67 ஓட்டங்களை பெற்றதுடன் ஆர். வேலுசாமி 25 ஓட்டங்களையும், வி.சஞ்ஜீவன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் தமது அணிக்கு பெற்றுக் கொடுத்ததுடன் எலக்கந்த ஜேடி போய்ஸ் சார்பாக பந்து வீச்சில் டி. விக்னேஸ் ஆறு ஓட்டங்களுக்கு ஒரு விக்கட்டை வீழ்த்தினார்.

68 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய எலக்கந்த ஜேடி போய்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டி.விக்னேஸ் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். அவ்வணியின் துடுப்பாட்ட வீரர்கள் போட்டியை தம்வசப்படுத்த முனைந்தபோதிலும் தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் பந்துவீச்சாளர்கள் சிறப்பான முறையில் பந்து வீசி போட்டியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

துடுப்பாட்டத்தில் ஆர்.பிரணவன் மாத்திரம் தனிநபராக போராடி ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். அவ்வணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்களில் 3 விக்கட்டுகளை இழந்து 40 ஓட்டங்களை பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் சார்பாக எஸ்.டிலக்ஸன்,யூ. வாகீசன் ஆகியோர் தலா ஒரு விக்கட்டினை வீழ்த்தினர்.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் சிறந்த வீரராகவும் தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் அணியின் ஆர்.வேலுசாமி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது எலக்கந்த ஜேடி போய்ஸ் அணியின் டி.விக்னேஸிற்கு வழங்கப்பட்டது. சிறந்த பந்துவீச்சாளருக்கான விருது ரட்ணம் செலஞ்சர்ஸ் அணியின் அஜித்துக்கு வழங்கப்பட்டது.

பிரதம விருந்தினராக ஈஸ்வரன் பிரதர்ஸ் தலைவர் கணேஷன் தெய்வநாயகம் கலந்துகொண்டதுடன் தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் அணிக்கு சம்பியன் கிண்ணத்தையும் ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசையும் வழங்கினார். இரண்டாம் இடத்தை பெற்ற எலக்கந்த ஜேடி போய்ஸ் அணிக்கு கிண்ணமும் 50 ஆயிரம் பணப் பரிசும் வழங்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர்களாக கிஷ் நிறுவனத்தின் அதிகாரிகள்,கல்லூரியின் பழைய மாணவரும், வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான எஸ்.ஸ்ரீ கஜன், எஸ்.மணிவண்ணன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இதுதவிர கல்லூரி அதிபர் மூ.மூவேந்தன், பழைய மாணவர் சங்க உப தலைவர் மீனாட்சி சுந்தரம் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சிற்றி செல்லும் டொன்னருமா?

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் கோல் காப்பாளரான ஜல்லுாயிஜி டொன்னருமாவைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சவூதி அரேபியக் கழகமான அல்-இத்திஹாட்டுக்கு சிற்றியின் கோல் காப்பாளர் எடெர்சன் செல்வாரென எதிர்பார்க்கப்படுகின்ற நிலையிலேயே அவரை 25 வயதான டொன்னருமா மூலம் பிரதியிட சிற்றி எதிர்பார்க்கின்றது.

இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனில் ஆறு ஆண்டுகள் இருந்த பின்னர் 2021ஆம் ஆண்டு பரிஸ் ஸா ஜெர்மைனில் இணைந்த டொன்னருமா, பரிஸ் ஸா ஜெர்மைனுடன் இன்னும் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளார்.





## யுனைட்டெட்டிலிருந்து விலகும் சஞ்சோ?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மத்தியகளவீரரான ஜடோன் சஞ்சோவைக் கைச்சாத்திட பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் விரும்புவதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டுடன் இன்னும் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 24 வயதான சஞ்சோவும் பரிஸ் ஸா ஜெர்மைனுக்கு செல்ல விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 'சிற்றியை விட்டு டி ப்ரூனே வெளியேறவில்லை'




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான கெவின் டி ப்ரூனே கழகத்தில் தொடருவாரென கழகத்தின் முகாமையாளர் பெப் குவாடியோலா தெரிவித்துள்ளார்.

சிற்றியுடன் ஓராண்டு ஒப்பந்தத்தையே 33 வயதான டி ப்ரூனே கொண்டிருக்கின்ற நிலையில் அதிக பணம் காரணமாக சவூதிக்குச் செல்வதைக் கருத்திற் கொள்வேன் என டி ப்ரூனே கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 24, ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.